முழுப்பதிப்புரிமையுடையது

அந்தரங்கமானது

# இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சை - 2020

## 60 - வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

### புள்ளி வழங்கும் திட்டம்

Department of Examinations - Sri Lanka



இது விடைத்தாள் பரீட்சகர்களின் உபயோகத்துக்காகத் தயாரிக்கப்பட்டது. பிரதம பரீட்சகர்களின் கலந்துரையாடல் நடைபெறும் சந்தர்ப்பத்தில் பரிமாறிக்கொள்ளும் கருத்துக்களுக்கிணங்க, இதில் உள்ள சில விடயங்கள் மாறலாம்.

இறுதித் திருத்தங்கள் உள்ளடக்கப்படவுள்ளன

# க.பொ.த (சாத.தர)ப் பரீட்சை - 2020
# 60 - வணிகக்கல்வியும் கணக்கீடும்

| | | | |
|---|---|---|---|
| வினாப்பத்திரம் I | - 1 x 40 | = | 40 புள்ளிகள் |

வினாப்பத்திரம் II

| | | |
|---|---|---|
| வினா இலக்கம் 01 கட்டாயமானது | = | 20 புள்ளிகள் |

## பகுதி I வணிகக்கல்வி

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 2 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |
| வினா இலக்கம் 3 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |
| வினா இலக்கம் 4 | மொத்தப்புள்ளிகள் | = | 08 |

(ஏதாவது இரு வினாக்களுக்கு 02 x 08 புள்ளிகள்) = 16 புள்ளிகள்

## பகுதி II கணக்கீடு

| | | | |
|---|---|---|---|
| வினா இலக்கம் 5 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |
| வினா இலக்கம் 6 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |
| வினா இலக்கம் 7 | மொத்தப்புள்ளிகள் | = | 12 |

(ஏதாவது இரு வினாக்களுக்கு 02 x 12 புள்ளிகள்) = 24 புள்ளிகள்

மொத்தம் = 60 புள்ளிகள்

| | | |
|---|---|---|
| **வினாப்பத்திரம் I** | - | **40 புள்ளிகள்** |
| **வினாப்பத்திரம் II** | - | **60 புள்ளிகள்** |
| **இறுதிப்புள்ளிகள்** | - | **100** |

Department of Examinations - Sri Lanka

# க.பொ.த (சா.தர)ப் பரீட்சை - 2020


## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடலுக்கான பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. சகல உதவிப் பரீட்சகர்களும் விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற மைப் பேனாவை பயன்படுத்தவும்.
2. பிரதம பரீட்சகர் ஊதாநிற மைப்பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.
3. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
4. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, ஒப்பம் இடவும்.
5. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பின்னங்களாக பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் □ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.
6. எண்கணித பரிசோதகர் புள்ளிகளைச் சரிபார்ப்பதற்கு நீல அல்லது கறுப்பு நிறமைப் பேனாவைப் பயன்படுத்த வேண்டும்.

Department of Examinations - Sri Lanka

**உதாரணம் - வினா இல 03**




**பல்தேர்வு விடைத்தாள்**

**1. துளைத்தாள் தயாரித்தல்**

I. புள்ளி வழங்கும் திட்டத்தின் படி சரியான தெரிவைத் துளைத்தாளில் அடையாளமிடவும்.

II அவ்வாறு அடையாளமிடப்பட்ட இடத்தை வெட்டி நீக்கித் துளைத்தாளைத் தயாரிக்கவும்.

III துளைத்தாளை விடைகளின் மீது சரியாக வைத்துக்கொள்ளக்கூடியதாகச் சுட்டெண் அடைப்பையும் வெட்டி நீக்கவும். சரியான விடைகளின் எண்ணிக்கையைக் காட்டும் அடைப்பையும் வெட்டி நீக்கவும்.

IV சரியான, பிழையான விடைகளை குறிப்பிடக்கூடியதாக ஒவ்வொரு வரிசைக்கும் இறுதியில் வெற்று நிரையொன்றை வெட்டி ஏற்படுத்திக் கொள்ளவும்.

V **வெட்டிக்கொண்ட துளைத்தாளில் பிரதம பரீட்சகரிடம் கையொப்பம் பெற்று அங்கீகரித்துக் கொள்ளவும்.**

2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.

3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை × அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் எழுதவும். அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும். புள்ளி பரிவர்த்தனை செய்யும் சந்தர்ப்பங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட புள்ளியை உரிய கூட்டினுள் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை மற்றும் கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். **பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.**
2. புள்ளிகளை குறிப்பிடும்போது ஓவலண்ட் கடதாசியின் வலது பக்க நிரலைப் பயன்படுத்தவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக **2 இலக்கங்களில் பதியவும்.** வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

✶ **புள்ளிப்பட்டியல் தயாரித்தல்**

I. ஒரு வினாப்பத்திரம் மாத்திரம் உள்ள பாடங்கள் தவிர ஏனைய சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது.

II. ஒவ்வொரு வினாப்பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியான புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும்.

III. வினாப்பத்திரம் I இற்கான புள்ளி புள்ளிப்பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் **பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும்.**

IV. வினாப்பத்திரம் II இற்கான புள்ளிப் பட்டியலை தயார் செய்யும்போது பகுதிப் புள்ளிகளைப் பதிவதோடு வினாப்பத்திரம் II இன் இறுதிப் புள்ளிகளை புள்ளிப் பட்டியலில் "**Total Marks**" என்ற நிரலில் பதியவும்.

V. 43 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து **எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.**

V. 21 – சிங்களமொழியும் இலக்கியமும், 22 – தமிழ்மொழியும் இலக்கியமும் ஆகிய இரு பாடங்களும் வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளி புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். வினாப்பத்திரம் II, III இற்கான பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி அவ் வினாப்பத்திரத்தின் மொத்தப் புள்ளிகளை, புள்ளிப்பட்டியலில் பதிய வேண்டும்.

**முக்கிய குறிப்பு :**

I. சகல சந்தர்ப்பங்களிலும் ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் உரிய முழுப்புள்ளியானது முழுத்தானத்தில் புள்ளி பட்டியலில் பதியப்படுதல் வேண்டும். எந்தவிதமான காரணங்களிற்காகவும் வினாப்பத்திரத்தின் இறுதிப்புள்ளியானது தசம தானங்களில் பதியப்படலாகாது.

II. புள்ளிப் பட்டியலின் சகல பக்கங்களிலும் புள்ளிகளைப் பதிந்து உதவிப் பரீட்சகர், புள்ளிகளை சரிபார்த்த உதவிப் பரீட்சகர், மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் எண்கணித பரீட்சகர் மற்றும் பிரதம பரீட்சகர் தமது குறியீட்டு இலக்கத்தை எழுதி கையொப்பமிட்டு உறுதிப்படுத்துவது கட்டாயமாகும்.

ooo

Department of Examinations - Sri Lanka

# 60 வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்
## புள்ளி வழங்கும் விதம்

| | | |
|---|---|---|
| வினாப்பத்திரம் I | | = 40 புள்ளிகள் |

வினாப்பத்திரம் II

| | | |
|---|---|---|
| 1ம் வினா | | = 20 புள்ளிகள் |
| பகுதி I - | 2 x 08 | = 16 புள்ளிகள் |
| பகுதி II | 2 x12 | = 24 புள்ளிகள் |
| மொத்தப் புள்ளிகள் | | = 100 புள்ளிகள் |

வினாப்பத்திரம் II

1ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02
V புள்ளிகள் - 02
VI புள்ளிகள் - 02
VII புள்ளிகள் - 02
VIII புள்ளிகள் - 02
IX புள்ளிகள் - 02
X புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் 20

பகுதி – I

2ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் 08

3ம் வினா

I புள்ளிகள் - 02
II புள்ளிகள் - 02
III புள்ளிகள் - 02
IV புள்ளிகள் - 02

மொத்தப் புள்ளிகள் 8

Department of Examinations - Sri Lanka

4ம் வினா

I புள்ளிகள் - 02

II புள்ளிகள் - 02

III புள்ளிகள் - 02

IV புள்ளிகள் - 02

**மொத்தப் புள்ளிகள் 08**

## பகுதி II
## கணக்கீடு

5ம் வினா

I புள்ளிகள் - 02

II புள்ளிகள் - 02

III புள்ளிகள் - 04

IV புள்ளிகள் - 04 மொத்தப் புள்ளிகள் 12

6ம் வினா

I புள்ளிகள் - 02

II புள்ளிகள் - 04

III புள்ளிகள் - 02

IV புள்ளிகள் - 04 மொத்தப் புள்ளிகள் 12

7ம் வினா

I புள்ளிகள் - 02

II புள்ளிகள் - 02

III புள்ளிகள் - 08

மொத்தப் புள்ளிகள் 12

Department of Examinations - Sri Lanka

OL/2020/60/T-I, II

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Department of Examinations, Sri Lanka

**60 T I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2020
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2020**
**General Certificate of Education (Ord. Level) Examination, 2020**

| | |
|---|---|
| ව්‍යාපාර හා ගිණුම්කරණ අධ්‍යයනය | I, II |
| **வணிகக் கல்வியும் கணக்கீடும்** | I, II |
| Business and Accounting Studies | I, II |

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
**மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்**
Additional Reading Time - 10 minutes

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## வணிகக் கல்வியும் கணக்கீடும் I

**கவனிக்க :**

(i) **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
(ii) **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
(iii) **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
(iv) அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றையும் பின்பற்றுக.

Department of Examinations - Sri Lanka

- பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு **1** தொடக்கம் **5** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

கிரிகுலம் மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒன்றியம், பாடசாலை கூட்டுறவுச் சங்கம், கல்விசார் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் ஒத்துழைப்பில், 'திகழ் அரிசி ஆலை' வணிக உரிமையாளர் தனம்சேகரினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட அரிசியில் தயாரித்து வழங்கப்படும் அரிசிக் கஞ்சி கோப்பையினை மாணவர்கள் விரும்புகின்றனர்.

**1.** கிரிகுலம் மகா வித்தியாலயத்தினால் நிறைவேற்றப்படும் மனிதத் தேவை எது?
(1) உணவு (2) கல்வி (3) சுகாதாரம் (4) பாதுகாப்பு

**2.** கிரிகுலம் மகா வித்தியாலயத்தின் புறச் சூழல் காரணியொன்றிற்கான உதாரணம்
(1) கல்விசார் ஊழியர்கள் (2) கல்விசாரா ஊழியர்கள்
(3) 'திகழ் அரிசி ஆலை' வணிகம் (4) பாடசாலையினது மாணவர்கள்

**3.** மேலே தரப்பட்ட சம்பவத்தில் காணப்படும் அரசதுறைச் சார்ந்த வணிக நிறுவனம்
(1) 'திகழ் அரிசி ஆலை' வணிகம் (2) பழைய மாணவர் ஒன்றியம்
(3) பாடசாலை கூட்டுறவுச் சங்கம் (4) கிரிகுலம் மகா வித்தியாலயம்

**4.** மேலே தரப்பட்ட சம்பவத்தில் குறித்த அரிசிக் கஞ்சியை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்படும் அரிசி எத்தகைய உற்பத்திக் காரணிக்கு உரித்தாகும்?
(1) நிலம் (2) உழைப்பு (3) மூலதனம் (4) முயற்சியாண்மை

**5.** மேலே தரப்பட்ட சம்பவத்தில் காணப்படும் 'திகழ் அரிசி ஆலை' வணிகம் தொடர்பிலான சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இவ் வணிகத்தின் பெயரைக் கட்டாயம் பதிவுசெய்தல் வேண்டும்.
(2) இவ் வணிகம் தொடர்பில் தனம்சேகரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதாகும்.
(3) இவ் வணிகத்திற்கு சட்ட ஆளுமை உள்ளது.
(4) இவ் வணிகம் இலாப நோக்கற்ற வணிகமாகும்.

**6.** பொருட்களை உற்பத்தி செய்யும் வணிகமாவது,
(1) வரையறுக்கப்பட்ட இலங்கை சீனி (தனியார்) கம்பனியாகும்.
(2) கூட்டுறவு மொத்த வியாபாரச் சங்கமாகும்.
(3) இலங்கை விமானச் சேவைகள் கம்பனியாகும்.
(4) இலங்கை மத்திய வங்கியாகும்.

**7.** ஜனநாயக நிர்வாகம், சுயமான திறந்த அங்கத்துவம் என்பன வணிக அமைப்பொன்றின் பண்புகளாகும். அத்தகைய வணிக அமைப்பிற்கான உதாரணம்
(1) குணம் மற்றும் சகோதரர்கள்
(2) வரை/மஹரகம பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(3) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
(4) வரை/ஸ்ரீலங்கா டெலிகொம் பொதுக் கம்பனி

**8.** கீழே சம்பவங்கள் சில தரப்பட்டுள்ளன.
A : ரூபன் 'மொடர்ன் சலூன்' இற்குச் சென்று தலைமுடியினை வெட்டிக் கொள்ளல்
B : சசிகரன் தனது பாவனைக்கு ஜப்பானிலிருந்து மோட்டார் வாகனமொன்றை இறக்குமதி செய்தல்
C : 'சுகீர்தனி பூ வியாபாரம்' இனால் புதிய பூக்கூடைகள் இரண்டினைக் கொள்வனவு செய்தல்
D : சங்கர் தனது அறுவடையில் 50 கிலோ நெல்லினை அரிசி ஆலை உரிமையாளர் ஒருவருக்கு விற்பனை செய்தல்

மேலே தரப்பட்ட சம்பவங்களில் மொத்த வியாபார நடவடிக்கைகளானவை,
(1) A யும் B யுமாகும். (2) A யும் C யுமாகும்.
(3) B யும் D யுமாகும். (4) C யும் D யுமாகும்.

- பின்வரும் சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு **9, 10** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

கனிமாறனுக்கு ரூ. 18 000 இற்கான இலங்கை வங்கியின் காசோலையொன்று அருணனிடமிருந்து கிடைத்தது. அது 'கைமாறத் தகாதது' என குறுக்குக் கோடிடப்பட்டிருந்தது. கனிமாறன் அந்த காசோலையை மக்கள் வங்கியிலுள்ள தனது நடைமுறைக் கணக்கில் வைப்பிலிட்டார்.

**9.** அருணனிடமிருந்து பெறப்பட்ட காசோலையானது,
(1) சிறப்பு முறைக் குறுக்குக் கோடிட்ட காசோலை ஆகும்.
(2) பொது முறைக் குறுக்குக் கோடிட்ட காசோலை ஆகும்.
(3) புறக்குறிப்பிடல் செய்ய இயலா காசோலை ஆகும்.
(4) வங்கி காசாளர் பகுதியில் காசாக பெற்றுக்கொள்ளக்கூடிய காசோலை ஆகும்.

**10.** மேலே சம்பவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காசோலை தொடர்பில்,
(1) பணம் பெறுபவர் கனிமாறனும் கட்டளையைப் பெறுபவர் மக்கள் வங்கியும் ஆகும்.
(2) கட்டளையிடுபவர் அருணனும் பணம் பெறுபவர் மக்கள் வங்கியும் ஆகும்.
(3) கட்டளையைப் பெறுபவர் இலங்கை வங்கியும் பணம் பெறுபவர் கனிமாறனும் ஆவர்.
(4) கட்டளையிடுபவர் கனிமாறனும் கட்டளையைப் பெறுபவர் இலங்கை வங்கியும் ஆகும்.

**11.** ரூ. 1 000 000 இற்கு காப்புறுதி செய்யப்பட்ட அதினவனின் வணிகக் கட்டடத்தில் ஒரு பகுதியில் ஏற்பட்ட தீ விபத்திற்கு இழப்பீடாக ரூ. 300 000 அவருக்கு வழங்கப்பட்டது. ரூ. 300 000 மாத்திரம் இழப்பீடாக வழங்கப்பட்டதற்கு ஏதுவான காப்புறுதித் தத்துவம்,
(1) காப்புறுதி செய்யும் உரிமை ஆகும். (2) உயர் நம்பிக்கை ஆகும்.
(3) இழப்பீட்டுத் தத்துவம் ஆகும். (4) பதிலீடு ஆகும்.

**12.** கீழே X நிரலில் தொடர்பாடல் ஊடகங்களும் Y நிரலில் தொடர்பாடல் ஊடகங்களுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன.

| X | Y |
|---|---|
| 1. வாய்மொழி மூலம் | A - பாடசாலையிலுள்ள மணியினை ஒலிக்கச் செய்தல் |
| 2. எழுத்து மூலம் | B - மாணவத் தலைவர்களின் கூட்டமொன்றை நடாத்துதல் |
| 3. இலத்திரனியல் எழுத்து மூலம் | C - பெற்றோர் கூட்டமொன்றிற்கான அழைப்புக் கடிதங்களை தபாலில் அனுப்புதல் |
| 4. சமிக்ஞைகளும் குறியீடுகளும் | D - வலயக் கல்விப் பணிமனைக்கு தொலைநகல் (Fax) மூலம் தகவலொன்றை அனுப்புதல் |

மேற்குறித்த தொடர்பாடல் ஊடகங்களுக்கேற்ப உதாரணங்கள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) B, C, A, D (2) B, C, D, A (3) C, D, A, B (4) C, D, B, A

**13.** "யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தினை கவர்ச்சிகரமாக நவீனமயப்படுத்துதல்"
இக்கூற்றில் வலியுறுத்தப்படும் போக்குவரத்தின் அடிப்படைக்கூறு,
(1) வழி ஆகும். (2) ஊடகம் ஆகும். (3) வலு ஆகும். (4) தரிப்பிடம் ஆகும்.

Department of Examinations - Sri Lanka

**14.** "ஆயுரா நலன் மேம்பாட்டு நிலையம் நோய் எதிர்ப்பு சக்தியினை ஏற்படுத்தும் பாணமொன்றை உற்பத்தி செய்யத் தீர்மானித்துள்ளது."
இக்கூற்றில் வலியுறுத்தப்படும் முகாமைத்துவ கருமத்தினையும் சந்தைப்படுத்தல் கலவை மாறியினையும் சரியான ஒழுங்குமுறையில் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) திட்டமிடலும் மேம்படுத்தலும் (2) ஒழுங்கமைத்தலும் விலையும்
(3) திட்டமிடலும் உற்பத்திப் பொருளும் (4) ஒழுங்கமைத்தலும் உற்பத்திப் பொருளும்

**15.** பங்கிலாபத்தினை வருமானமாக பெற்றுத்தரக்கூடிய முதலீடு,
(1) சாதாரண பங்குகளைக் கொள்வனவு செய்தல் ஆகும்.
(2) நிலையான வைப்பொன்றினை ஆரம்பித்தல் ஆகும்.
(3) சேமிப்புக் கணக்கில் காசு வைப்பிலிடுதல் ஆகும்.
(4) தங்க ஆபரணங்களைக் கொள்வனவு செய்தல் ஆகும்.

**16.** முதலீடு தொடர்பிலான **தவறான** கூற்றினைத் தெரிவுசெய்க.
(1) காணிகளில் முதலிடுவதன் மூலம் மூலதன இலாபத்தினை ஈட்டலாம்.
(2) அரசு நீண்டகால நிதித் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள திறைசேரி உண்டியல்களை வழங்குகின்றது.
(3) முதலீட்டாளர் ஒருவர் கம்பனியொன்றின் சாதாரண பங்குகளை கொள்வனவு செய்வதன் மூலம் அதன் உரிமையாளராகின்றார்.
(4) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம், இலங்கை பிணைகள் செலாவணி ஆணைக்குழுவினால் மேற்பார்வை செய்யப்படும்.

**17.** அதிகரித்தல் வரவு, குறைதல் செலவு எனும் இரட்டைப் பதிவு தத்துவம் பொருந்தும் கணக்கு வகை,
(1) சொத்துக் கணக்காகும். (2) பொறுப்புக் கணக்காகும்.
(3) உரிமைக் கணக்காகும். (4) வருமானக் கணக்காகும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **18** தொடக்கம் **20** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.
ரவீந்திரனின் வணிகத்தில் 01 நவெம்பர் 2020 இற்கான கணக்கீட்டுச் சமன்பாடு கீழே தரப்பட்டுள்ளது.

| சொத்துக்கள் (ரூ.) | = | உரிமையாண்மை (ரூ.) | + | பொறுப்புக்கள் (ரூ.) |
|---|---|---|---|---|
| 50 000 | | 35 000 | | 15 000 |

இவ்வணிகத்தில் 2020 நவெம்பர் முதலாவது வாரத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - ரூ. 10 000 இற்கு பொருட்களை கடன் கொள்வனவு செய்தல்
B - ரூ. 5 000 இற்கு பொருட்களை உடன் காசுக்குக் கொள்வனவு செய்தல்
C - கடன்கொடுத்தோருக்கு ரூ. 7 000 இனைச் செலுத்துதல்
D - ரூ. 5 000 இற்குக் கொள்வனவு செய்த பொருட்களை ரூ. 7 000 இற்கு உடன் காசுக்கு விற்பனை செய்தல்

**18.** மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் பின்னர், இவ் வணிகத்தின் பொறுப்புக்களின் பெறுமதி யாது?
(1) ரூ. 10 000 ஆகும். (2) ரூ. 15 000 ஆகும்.
(3) ரூ. 18 000 ஆகும். (4) ரூ. 25 000 ஆகும்.

**19.** வணிகத்தில் 01.11.2020 இல் காணப்பட்ட மொத்தச் சொத்துப் பெறுமதியில் மாற்றத்தை **ஏற்படுத்தாத** கொடுக்கல் வாங்கல் எது?
(1) A (2) B (3) C (4) D

**20.** 2020 நவெம்பர் முதல் வாரத்தின் இறுதியில் வணிகத்தின் உரிமையாண்மை
(1) ரூ. 2 000 இனால் அதிகரிக்கும். (2) ரூ. 7 000 இனால் அதிகரிக்கும்.
(3) ரூ. 2 000 இனால் குறைவடையும். (4) ரூ. 5 000 இனால் குறைவடையும்.

**21.** வணிகமொன்றில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கலொன்றின் செலவுப் பதிவு கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| காசுக் கணக்கு | செலவு | ரூ. 4 500 |
| பெற்ற கழிவுக் கணக்கு | செலவு | ரூ. 500 |

இக் கொடுக்கல் வாங்கல் யாது?
(1) ரூ. 500 கழிவு குறைக்கப்பட்டு ரூ. 5 000 இற்குப் பொருட்களை உடன் காசுக்குக் கொள்வனவு செய்தல்
(2) ரூ. 500 இற்கான கழிவு குறைக்கப்பட்டு ரூ. 5 000 இற்குப் பொருட்களை கடன் கொள்வனவு செய்தல்
(3) 10% கழிவுடன் ரூ. 5 000 கடன்கொடுநருக்கு காசு செலுத்துதல்
(4) 10% கழிவுடன் ரூ. 5 000 கடன்படுநரிடமிருந்து காசு பெறப்படல்

Department of Examinations - Sri Lanka

**22.** ஆடை உற்பத்தி வணிகமொன்று தையல் இயந்திரங்கள் ஐந்தினை ரூ. 500 000 இற்கு உடன் காசுக்கு கொள்வனவு செய்தமையை பதிவு செய்தலுக்குரிய மூல ஆவணத்தையும் மூலப்பதிவேட்டையும் சரியான ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) கொள்வனவுப் பட்டியல், கொள்வனவு நாளேடு
(2) கொடுப்பனவுக் கைச்சாத்து, காசேடு
(3) கொடுப்பனவுக் கைச்சாத்து, கொள்வனவு நாளேடு
(4) நாட்குறிப்பு கைச்சாத்து, பொது நாட்குறிப்பேடு

**23.** ஆடை வணிகமொன்றின் பொது நாட்குறிப்பேட்டில் பதியப்படும் கொடுக்கல் வாங்கல் எது?

(1) ரூ. 50 000 இற்கு பொருட்களை கடனுக்குக் கொள்வனவு செய்தல்
(2) ரூ. 10 000 கடன்கொடுநருக்கு காசு செலுத்தல்
(3) உரிமையாளரின் வீட்டு மின்சாரக் கட்டணம் ரூ. 2000 இனை வணிகத்தின் பணத்தில் செலுத்துதல்
(4) ரூ. 80 000 இற்கு நகலெடுக்கும் இயந்திரமொன்றை கடனுக்குக் கொள்வனவு செய்தல்

**24.** வணிகமொன்றில் 2020 டிசெம்பர் மாதத்திற்கான சில்லறை காசுச் செலவு ரூ. 1 900 ஆகும். டிசெம்பர் மாத இறுதியில் சில்லறைக் காசேட்டு மீதி ரூ. 100 ஆகும். 2021 ஜனவரி மாதம் முதல் சில்லறைக் காசு வசக்கட்டினை ரூ. 1 000 இனால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டது. 01.01.2021 இல் சில்லறைக் காசு வசக்கட்டு மீள்நிரப்பப்பட வேண்டிய தொகை எவ்வளவு?

(1) ரூ. 1 000 (2) ரூ. 1 900 (3) ரூ. 2 900 (4) ரூ. 3 000

**25.** வணிகமொன்றின் வங்கிக் கணக்கில் பதிவிடப்படாமல் வங்கிக்கூற்றில் காணக்கூடிய கொடுக்கல் வாங்கல் எது?

(1) ரூ. 50 000 இனை வங்கிக் கணக்கில் வைப்பிலிடல்
(2) வங்கிக்கு நேரடியாக ரூ. 5 000 இற்கு பங்கிலாப வருமானம் பெறப்படல்
(3) ரூ. 15 000 இற்கு வழங்கப்பட்ட காசோலையொன்றிற்கு வங்கியினால் காசு செலுத்தப்படல்
(4) வைப்பிலிட்ட ரூ. 20 000 காசோலை, வங்கியினால் கணக்கில் செலவு வைக்கப்படல்

**26.** 01 டிசெம்பர் 2020 ஆம் திகதி வங்கிக்கூற்றில் அனுகூலமான மீதியாக ரூ. 20 000 காணப்பட்டது. வங்கியினால் பதிவிடப்பட்ட அம்மாதத்திற்குரிய கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| 05/12 | வைப்பிலிட்ட காசோலைகள் | ரூ. 5 000 |
| 09/12 | நிலையியல் கட்டளைக் கொடுப்பனவுகள் | ரூ. 8 000 |
| 15/12 | வங்கியில் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைக்கான கொடுப்பனவு | ரூ. 12 000 |
| 25/12 | கடன்படுநர் அனுப்பிய பணம் | ரூ. 10 000 |

31 டிசெம்பர் 2020 இல் வங்கிக் கூற்று மீதி எவ்வளவு?

(1) ரூ. 13 000 (2) ரூ. 15 000 (3) ரூ. 22 000 (4) ரூ. 25 000

**27.** வணிகமொன்றினால் ஒன்று ரூ. 400 வீதம் 50 பால் மா பைகற்றுகள் 10% வியாபாரக் கழிவுடன் கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்டன. ஒரு மாதத்திற்கு முன்னதாக பணம் செலுத்தினால் 5% கழிவு வழங்கப்படும். கொள்வனவு நாளேட்டில் பதியவேண்டிய பெறுமதி என்ன?

(1) ரூ. 17 100 (2) ரூ. 18 000 (3) ரூ. 19 000 (4) ரூ. 20 000

**28.** பரீட்சை மீதியில் வரவு, செலவு நிரல்களின் கூட்டுத்தொகை சமப்படாமைக்கு ஏதுவான கணக்கீட்டு வழு எது?

(1) கொடுத்த கழிவு ரூ. 500 இனை பெற்ற கழிவு கணக்கில் செலவு வைத்து உரிய கடன்படுநர் கணக்கில் வரவு வைத்தல்
(2) ரூ. 12 000 இற்கான கொள்வனவு பட்டியல் முழுமையாக ஏடுகளில் விடுபடல்
(3) பெறப்பட்ட வீட்டு வாடகை ரூ. 2 500 இனை காசுக் கணக்கில் சரியாக பதிவிட்டு வீட்டு வாடகை கணக்கில் வரவு வைத்தல்
(4) கடனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட ரூ. 20 000 இற்கான பொருட்களை உபகரணக் கணக்கில் வரவு வைத்து, கடன்படுநர் கணக்கில் செலவு வைத்தல்

Department of Examinations - Sri Lanka

**29.** வணிகமொன்றின் பொது நாட்குறிப்பேட்டில் வழுவொன்றினை சீராக்குவதற்கான நாளேட்டுப் பதிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| தொங்கல் கணக்கு (வரவு) | 2 000 | |
| பெற்ற கழிவுக் கணக்கு | | 2 000 |


இங்கு இடம்பெற்றுள்ள கணக்கீட்டு வழு,

(1) கொடுத்த கழிவு ரூ. 2 000, பெற்ற கழிவுக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளமை
(2) பெற்ற கழிவுக் கணக்கின் வரவு மீதி ரூ. 2 000 குறைவாகக் கூட்டப்பட்டுள்ளமை
(3) பெற்ற கழிவுக் கணக்கு மீதி ரூ. 2 000 பரீட்சை மீதிக்கு கொண்டு செல்லப்படாமை
(4) கடன்கொடுத்தோருக்கு பணம் செலுத்துகையில் பெறப்பட்ட ரூ. 2 000 கழிவு புத்தகங்களில் பதிவிடப்படாமை

**30.** சங்கமம் கழகத்தின் 31 டிசெம்பர் 2020 இற்கான பெறுவனவுகள் கொடுப்பனவுகள் கணக்கு மீதி ரூ. 15 000 ஆகும். எனினும், அத்தினத்தில் கையிலுள்ள காசு ரூ. 16 500 என அதன் பொருளாளர் கூறுகின்றார்.
இவ் வேறுபாட்டிற்கான காரணம்,

(1) பழைய பத்திரிகை விற்பனை வருமானம் ரூ. 1 500 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை பெறப்படாமை
(2) காசாக செலுத்திய தொழிலாளர்களுக்கான கூலி ரூ. 1 500 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை பதிவிடப்படாமை
(3) டிசெம்பர் 31 திகதி வரை செலுத்தப்படாததும் பதிவிடப்படாததுமான ரூ. 1 500 தொலைபேசிக் கட்டணம்
(4) காசாகப் பெறப்பட்ட ஆனால், டிசெம்பர் 31 வரை பதிவிடப்படாத ரூ. 1 500 இற்கான அங்கத்துவப் பண வருமானம்

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **31, 32** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.
உற்பத்திக் கிரயத்தின் அடிப்படைக் கூறுகளைக் காட்டும் வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது.




மொரட்டுவை தளபாட உற்பத்தி வணிகத்தின் கிரயங்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - மரத்திற்கான கிரயம் ரூ. 40 000
B - இயந்திரத் தேய்வு ரூ. 5 000
C - மணற் கடதாசி, மெருகூட்டலுக்கான செலவு ரூ. 2 000
D - தச்சுத் தொழிலாளியின் சம்பளம் ரூ. 30 000
E - மின்சாரச் செலவு ரூ. 2 000

**31.** மேலே தரப்பட்ட வரைபடத்தில் இலக்கம் ① இற்குப் பொருத்தமான மொரட்டுவை தளபாட உற்பத்தி வணிகத்தின் கிரய உருப்படிகளானவை,

(1) A யும் C யும் ஆகும். (2) A யும் D யும் ஆகும். (3) B யும் D யும் ஆகும். (4) C யும் D யும் ஆகும்.

**32.** மேலே தரப்பட்ட வரைபடத்தில் இலக்கம் ② இற்குப் பொருத்தமான மொரட்டுவை தளபாட உற்பத்தி வணிகத்தின் கிரயம் எவ்வளவு?

(1) ரூ. 2 000 (2) ரூ. 5 000 (3) ரூ. 7 000 (4) ரூ. 9 000

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **33, 34** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

சந்திராவினது வணிகம் 01.01.2019 இல் ரூ. 950 000 கிரயத்திற்குக் கொள்வனவு செய்த கட்டடத்தை மாதாந்தம் ரூ. 20 000 வீதம் 01.07.2020 இல் வாடகைக்கு வழங்கி, 31.12.2020 இல் முடிவுற்ற வருடத்தில் ரூ. 100 000 இனை கட்டட வாடகையாகப் பெற்றுள்ளது. கட்டடத்தின் பயன்தரு ஆயுட்காலம் 10 வருடங்களாகவும், எஞ்சிய பெறுமதி ரூ. 50 000 எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. வணிகம் கட்டடங்களை எளிய நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடுகின்றது.

**33.** 31.12.2020 இல் முடிவுற்ற ஆண்டிற்கான கட்டடத் தேய்வினைக் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) ரூ. 45 000 (2) ரூ. 90 000 (3) ரூ. 95 000 (4) ரூ. 180 000

Department of Examinations - Sri Lanka

**34.** மேலே தரப்பட்ட தகவல்கள் தொடர்பில் சரியான கூற்றைத் தெரிவுசெய்க.
(1) 31.12.2020 இல் செலுத்தப்பட வேண்டிய கட்டட வாடகை ரூ. 20 000 ஆகும்.
(2) 31.12.2020 இல் பெறப்பட வேண்டிய கட்டட வாடகை ரூ. 120 000 ஆகும்.
(3) 31.12.2020 இல் பெறப்பட வேண்டிய கட்டட வாடகை ரூ. 20 000 ஆகும்.
(4) 31.12.2020 அன்று முடிவுறும் வருடத்திற்குரிய கட்டட வாடகை வருமானம் ரூ. 100 000 ஆகும்.

● பின்வரும் தகவல்களைப் பயன்படுத்தி **35** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்களுக்கு விடை தருக.

31.12.2020 இல் இருந்தவாறு மேனகாவின் வணிகத்தின் பரீட்சை மீதியிலிருந்து பெறப்பட்ட சில மீதிகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | ரூ. |
|---|---|
| விற்பனைகள் | 600 000 |
| கொள்வனவுகள் | 350 000 |
| உட்சுமைக்கூலி | 1 000 |
| தளபாடங்கள் (கிரயத்தில்) | 50 000 |
| இருப்பு (01.01.2020 இல் உள்ளவாறு) | 20 000 |
| கடன்பட்டோர் | 35 000 |
| மின்கட்டணம் | 15 000 |
| 10% வங்கிக் கடன் | 600 000 |
| விளம்பரம் | 32 000 |
| காசு மீதி | 7 000 |
| மேலதிக வருமானம் | 16 500 |
| மூலதனம் (01.01.2020 இல்) | 400 000 |
| சம்பளமும் கூலியும் | 75 000 |
| பற்று | 15 000 |

மேலதிக தகவல்கள் :

1. 31.12.2020 இல் உள்ளவாறு சரக்கிருப்பு மீதி ரூ. 50 000 ஆகும்.
2. 31.12.2020 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய சம்பளமும் கூலியும் ரூ. 15 000 ஆகும்.
3. தளபாடங்கள் வருடாந்தம் 10% வீதம் எளிய நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்விடப்படும்.

**35.** மேனகாவின் வணிகத்தில் 31.12.2020 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விற்பனைக் கிரயம்
(1) ரூ. 321 000 (2) ரூ. 351 000 (3) ரூ. 370 000 (4) ரூ. 371 000

**36.** மேனகாவின் வணிகத்தில் 31.12.2020 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த இலாபம்
(1) ரூ. 279 000 (2) ரூ. 280 000 (3) ரூ. 320 000 (4) ரூ. 321 000

**37.** மேனகாவின் வணிகத்தில் 31.12.2020 இல் முடிவுற்ற ஆண்டுக்கான மொத்த வருமானம்
(1) ரூ. 295 500 (2) ரூ. 600 000 (3) ரூ. 601 500 (4) ரூ. 616 500

**38.** மேனகாவின் வணிகத்தில் 31.12.2020 இல் முடிவுற்ற ஆண்டுக்கான விநியோகச் செலவு, நிர்வாகச் செலவு மற்றும் நிதிச் செலவு பெறுமதிகளை ஒழுங்குமுறையில் காட்டும் விடையைத் தெரிவுசெய்க.
(1) ரூ. 33 000, ரூ. 95 000, ரூ. 60 000
(2) ரூ. 32 000, ரூ. 110 000, ரூ. 660 000
(3) ரூ. 32 000, ரூ. 110 000, ரூ. 60 000
(4) ரூ. 110 000, ரூ. 32 000, ரூ. 660 000

**39.** மேனகாவின் வணிகத்தில் 31.12.2020 இல் உள்ளவாறு நடைமுறை பொறுப்புக்களின் மொத்தப் பெறுமதி
(1) ரூ. 15 000 (2) ரூ. 60 000 (3) ரூ. 75 000 (4) ரூ. 675 000

**40.** மேனகாவின் வணிகத்தில் 31.12.2020 இல் உள்ளவாறு நடைமுறை சொத்துகளின் மொத்தப் பெறுமதி
(1) ரூ. 45 000 (2) ரூ. 50 000 (3) ரூ. 92 000 (4) ரூ. 142 000

* *

Department of Examinations - Sri Lanka

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

රහස්‍යයි
அந்தரங்கமானது

## අ.පො.ස. (සා.පෙළ) විභාගය - 2020
## க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை - 2020

විෂය අංකය / பாட இலக்கம்: **60**

විෂයය / பாடம்: **வணிகமும் கணக்கீடும்**

### I පත්‍රය - පිළිතුරු
### I பத்திரம் - விடைகள்

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරෙහි අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 3 | 31. | 2 |
| 02. | 3 | 12. | 2 | 22. | 2 | 32. | 3 |
| 03. | 4 | 13. | 4 | 23. | 4 | 33. | 2 |
| 04. | 3 | 14. | 3 | 24. | 3 | 34. | 3 |
| 05. | 1 | 15. | 1 | 25. | 2 | 35. | 1 |
| 06. | 1 | 16. | 2 | 26. | 2 | 36. | 1 |
| 07. | 2 | 17. | 1 | 27. | 2 | 37. | 4 |
| 08. | 4 | 18. | 3 | 28. | 3 | 38. | 3 |
| 09. | 2 | 19. | 2 | 29. | 1,2,3,4 | 39. | 3 |
| 10. | 3 | 20. | 1 | 30. | 4 | 40. | 3 |

Department of Examinations - Sri Lanka

විශේෂ උපදෙස් / விசேட அறிவுறுத்தல் } එක් පිළිතුරකට ලකුණු / ஒரு சரியான விடைக்கு **01** බැගින் / புள்ளி வீதம்

**මුළු ලකුණු** / மொத்தப் புள்ளிகள் **01 × 40 = 40**

---

පහත නිදසුනෙහි දැක්වෙන පරිදි බහුවරණ උත්තරපත්‍රයේ අවසාන තීරුවේ ලකුණු ඇතුළත් කරන්න.
கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் உதாரணத்திற்கு அமைய பல்தேர்வு வினாக்களுக்குரிய புள்ளிகளை பல்தேர்வு விடைப்பத்திரத்தின் இறுதியில் பதிக.

නිවැරදි පිළිතුරු සංඛ්‍යාව / சரியான விடைகளின் தொகை: **25 / 40**

I පත්‍රයේ මුළු ලකුණු / பத்திரம் I இன் மொத்தப்புள்ளி: **25 / 40**

# வணிகக் கல்வியும் கணக்கீடும் II

**1.** பின்வரும் சம்பவத்தைப் பயன்படுத்தி (i) தொடக்கம் (x) வரையான வினாக்களுக்கு விடை தருக.

சூழல் முகாமைத்துவம் தொடர்பான பட்டதாரியான ஸ்ரீநிதி தனது தந்தைக்குச் சொந்தமான பெரிய பாக்குத் தோப்பிலுள்ள மரங்களில் உதிரும் பாக்கு மட்டைகளைக் கொண்டு உணவினைப் பொதி செய்யக்கூடிய பெட்டிகளைத் தயாரிக்கத் திட்டமிட்டார். தனது சகோதரியான லக்ஷ்மியுடன் இணைந்து பாக்குத் தோப்பில் விழுந்து கிடக்கும் பாக்கு மட்டைகளைச் சேகரித்து, அவற்றைக் கழுவிச் சுத்தப்படுத்திக் காயவைத்து, பதப்படுத்தி உணவுப் பொதியிடும் பெட்டிகளைத் தயாரிக்கும் வணிகமொன்றை 'ஸ்ரீலக் உற்பத்திகள்' எனும் பெயரில் 2020 மார்ச் 01 ஆம் திகதி ஆரம்பித்து, தேவையான ஊழியர்களைப் பணிக்கமர்த்தினார். ஸ்ரீநிதியும் லக்ஷ்மியும் ரூ. 50 000 வீதம் முதலீடு செய்து வணிகத்தினை தொடங்கியதுடன், அன்றே ஸ்ரீநிதியிடம் இருந்த ரூ. 300 000 பெறுமதியான சிறியரக லொறியொன்றையும் வணிகத்தில் ஈடுபடுத்தினர்.

2020 மார்ச் மாதத்தின் உணவு பொதியிடும் பெட்டி தயாரிப்புடன் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- உணவுப் பொதியிடும் பெட்டிகளைத் தயாரித்தல், ஒட்டுதல், துப்பரவு செய்வதற்கான பொருட்களை உடன் காசுக்கு கொள்வனவு செய்தல்........................ ரூ. 18 000
- உணவுப் பொதியிடும் பெட்டிகளைத் தயாரிப்பவருக்கான மாதச் சம்பளக் கொடுப்பனவு........................................................................................ ரூ. 20 000
- மார்ச் மாத மின்சாரக் கட்டணம் (31 மார்ச் வரை செலுத்தப்படவில்லை.).................. ரூ. 4 000
- உணவு பொதியிடும் பெட்டி தயாரிப்பதற்கான அச்சுச் சட்டகத்திற்கான கொடுப்பனவு........................................................................................ ரூ. 30 000
- உணவு பொதியிடும் பெட்டி தயாரிப்பதற்கான அச்சு சட்டகத்திற்கு மாதம் ரூ. 1 000 வீதம் பெறுமானத் தேய்விடல் வேண்டும்.

2020 மார்ச் மாதத்தின் உற்பத்திகளை விநியோகித்தல் தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- வாகன ஓட்டுநருக்குச் செலுத்திய சம்பளம்................................................... ரூ. 30 000
- லொறிக்கான எரிபொருள் மற்றும் பராமரிப்புச் செலவு கொடுப்பனவு....................... ரூ. 20 000
- விநியோகத்திற்குப் பயன்படுத்தப்படும் லொறிக்கு வருடாந்தம் 20% வீதம் பெறுமானத் தேய்விட வேண்டும்.

உணவுப் பொதியிடும் பெட்டிகள் பல்பொருள் அங்காடிகளுக்கு கடன் அடிப்படையில் விநியோகிக்கப்படும். மார்ச் மாதத்தில் உணவுப் பொதியிடும் பெட்டிகள் 600 உற்பத்தி செய்யப்பட்டதுடன், ஒரு பெட்டி ரூ. 200 வீதம் எல்லாப் பெட்டிகளும் 10% கழிவுடன் விநியோகம் செய்யப்பட்டன.

31 மார்ச் 2020 இற்கு மீதமாகவுள்ள உணவுப் பொதியிடும் பெட்டிகளைத் தயாரித்தல், ஒட்டுதல், துப்பரவு செய்தலுக்கான பொருட்கள் ரூ. 7 000 ஆகும்.

பொலித்தீன், பிளாஸ்டிக் (நெகிழி) உணவுப் பொதியிடும் பெட்டிகளைத் தடை செய்வதற்கு அரசு மேற்கொண்ட தீர்மானத்தின் காரணமாக ஸ்ரீலக் உற்பத்திகளுக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

(i) (அ) 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தினால் நிறைவேற்றப்படும் பிரதான மனிதத் தேவை யாது?

(ஆ) மேலே (i) (அ) இல் நீங்கள் குறிப்பிட்ட மனிதத் தேவை, 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தினால் நிறைவேற்றப்படும் விதத்தினைக் குறிப்பிடுக.

(ii) 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தினால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொதியிடும் பெட்டிகள் தொடர்பில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்திக் காரணிகளுக்கு ஓர் உதாரணம் வீதம் எழுதுக. (விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள அட்டவணை மாதிரியைப் பயன்படுத்துக.)

| உற்பத்திக் காரணி | உதாரணம் |
|---|---|
| 1. நிலம் | |
| 2. மூலதனம் | |

Department of Examinations - Sri Lanka

(iii) (அ) 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தின் பலம் ஒன்றினையும் வாய்ப்பு ஒன்றினையும் எழுதுக.
(ஆ) மேலே தரப்பட்ட சம்பவத்தில் உள்ள தனியார் துறை வணிகத்திற்கான **இரண்டு** உதாரணங்களை எழுதுக.

(iv) 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்துடன் தொடர்பான,
(அ) சந்தைப்படுத்தல் கலவை மாறிகளான 'உற்பத்திப் பொருள்' , 'விலை' என்பவற்றிற்கு ஒவ்வோர் உதாரணம் தருக.
(ஆ) முகாமைத்துவக் கருமங்களான 'திட்டமிடல்' , 'ஒழுங்கமைத்தல்' ஆகிய ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் எழுதுக.

(v) (அ) 01 மார்ச் 2020 இற்கு 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தின் மூலதனம் எவ்வளவு?
(ஆ) 01 மார்ச் 2020 இற்கு 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தின் சொத்துகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.

(vi) 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தின் 2020 மார்ச் மாதத்திற்கான விற்பனையைப் பதிவிடும் இரட்டைப் பதிவினை உரிய பெறுமதிகளுடன் எழுதுக.

(vii) (அ) 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தில் பயன்படுத்தப்படும் மூலப்பதிவேடு **ஒன்றினைக்** குறிப்பிடுக.
(ஆ) மேலே (vii) (அ) இல் நீங்கள் குறிப்பிட்ட மூலப்பதிவேட்டில் உள்ளடக்கப்படும் கொடுக்கல் வாங்கல் ஒன்றை இச் சம்பவத்தில் இருந்து மேற்கோள் காட்டி எழுதுக.

(viii) 2020 மார்ச் மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட உணவுப் பொதியிடும் பெட்டி ஒன்றிற்கான கிரயத்தினைக் கணிப்பிடுக.

(ix) 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தின் 2020 மார்ச் மாதத்திற்கான தேறிய இலாபம் அல்லது நட்டத்தினைக் கணிப்பிடுக.

(x) 'ஸ்ரீலக் உற்பத்திகள்' வணிகத்தின் 31 மார்ச் 2020 இற்கு மொத்த உரிமையாண்மை, மொத்தப் பொறுப்புகளின் பெறுமதி ஆகியவற்றை வெவ்வேறாக எழுதுக.

**(02 × 10 = 20 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**1.** i. அ. உணவு (01 புள்ளி)

ஆ. உணவினைப் பொதிசெய்யும் பெட்டிகளைத் தயாரித்தல். (01 புள்ளி)

ii.

| உற்பத்திக் காரணி | உதாரணம் |
|---|---|
| 1. நிலம் | பாக்கு மட்டை |
| 2. மூலதனம் | – பெட்டிகளை ஒட்டுதல், சுத்தப்படுத்தல், பெட்டி தயாரித்தலுக்கான பொருட்கள்<br>– காசு<br>– அச்சுச் சட்டகம் |

(1 × 2 = 2 புள்ளிகள்)

iii. அ. **பலம்**

- ஸ்ரீநிதி சூழல் முகாமைத்துவப் பட்டதாரியாவார்.
- உரிமையாளரின் நிதிப்பலம்

**வாய்ப்பு**

- பொலித்தீன், பிளாஸ்திக் உணவுப் பொதியிடும் பெட்டிகளை தடை செய்வதற்கு அரசு மேற்கொண்ட தீர்மானம்
- தந்தைக்குச் சொந்தமான பெரிய பாக்குத் தோப்புக் காணப்பட்டமை. (1/2 × 2 = 01 புள்ளி)

ஆ. – ஸ்ரீலக் உற்பத்திகள் வணிகம்
– பல்பொருள் அங்காடி (1/2 × 2 = 01 புள்ளி)

iv. அ. உற்பத்திப் பொருள் – உணவினைப் பொதி செய்யும் பெட்டி
விலை – ஒரு பெட்டியின் விலை ரூபா 200
– 10% வியாபாரக் கழிவு (1/2 × 2 = 01 புள்ளி)

ஆ. **திட்டமிடல்**

– பாக்கு மட்டைகளைக் கொண்டு உணவினைப் பொதியிடும் பெட்டிகளை தயாரிக்கத் திட்டமிட்டார்.

**ஒழுங்கமைத்தல்**

– தேவையான ஊழியர்களை பணிக்கு அமர்த்தல்
– உணவுப் பொதியிடும் பெட்டிகளை தயாரிப்பதற்கான அச்சுச் சட்டகத்தினை வாங்குதல்.
– பெட்டிகளை தயாரித்தல், ஒட்டுதல், துப்பரவு செய்தலுக்குரிய பொருட்களை வாங்குதல்.
– லொறியை வணிகத்தில் ஈடுபடுத்தல்.

(1/2 × 2 = 01 புள்ளி)

v. அ. மூலதனம் – ரூபா 400 000

அல்லது

ரூபா 50 000 + ரூபா 50 000 + ரூபா 300 000 = ரூபா 400 000 (01 புள்ளி)

ஆ. – காசு
– லொறி (1/2 × 2 = 01 புள்ளி)

vi. கடன்பட்டோர் கணக்கு வரவு ரூபா 108 000
விற்பனைக் கணக்கு செலவு ரூபா 108 000 (02 புள்ளிகள்)

vii. அ. காசுக்கணக்கு, விற்பனை நாட்குறிப்பு, பொது நாட்குறிப்பு (1 × 1 = 1 புள்ளி)

ஆ. **காசுக்கணக்கு**

| | | |
|---|---|---|
| – காசாக ஈடுபடுத்திய மூலதனம் | ரூபா | 100 000 |
| – சம்பளக் கொடுப்பனவு | ரூபா | 50 000 |
| – பொருட் கொள்வனவு | ரூபா | 18 000 |
| – பெட்டி தயாரிக்க அச்சு வாங்கியது | ரூபா | 30 000 |
| – லொறிக்கான எரிபொருள், பராமரிப்புச் செலவு | ரூபா | 20 000 |

**விற்பனை நாட்குறிப்பு**

| | | |
|---|---|---|
| – கடனுக்கு விற்ற உணவுப் பொதியிடும் பெட்டிகள் | ரூபா | 108 000 |

**பொது நாட்குறிப்பு**

| | | |
|---|---|---|
| – அட்டுறு மின் கட்டணம் | ரூபா | 4 000 |
| – ஸ்ரீநிதி, லக்ஷ்மி ஆகியோர் தமது சொந்த லொறியை வியாபாரத்தில் ஈடுபடுத்தியது | ரூபா | 300 000 |
| – லொறி பெறுமானத் தேய்வு | ரூபா | 5 000 |
| – அச்சு சட்டக பெறுமானத் தேய்வு | ரூபா | 1 000 |

(1 × 1 = 01 புள்ளி)

viii. **உணவுப் பொதியிடும் பெட்டியொன்றுக்கான கிரயக் கணிப்பீடு** (ரூபா)

| | |
|---|---|
| பயன்படுத்திய பெட்டி தயாரித்தல் பொருள் கொள்வனவு | 11 000 |
| பெட்டி தயாரிப்பவரின் சம்பளம் | 20 000 |
| மின் கட்டணம் | 4 000 |
| அச்சுச் சட்டக பெறுமானத் தேய்வு | 1 000 |
| மொத்த உற்பத்திக் கிரயம் | 36 000 |

உணவு பொதியிடும் பெட்டி ஒன்றுக்கான கிரயம் $= \frac{36000}{600}$ (1/2) (1/2)

= ரூபா 60 (01) (02 புள்ளிகள்)



Department of Examinations - Sri Lanka

அல்லது

| **உணவுப் பொதியிடும் பெட்டியொன்றுக்கான ஒட்டுதல் பொருள் இருப்பினைத் தவிர்த்து கிரயம்** | (ரூபா) |
|---|---|
| பயன்படுத்திய பெட்டி தயாரித்தல் பொருள் கொள்வனவு | 18 000 |
| பெட்டி தயாரிப்பவரின் சம்பளம் | 20 000 |
| மின் கட்டணம் | 4 000 |
| அச்சுச் சட்டக பெறுமானத் தேய்வு | 1 000 |
| மொத்த உற்பத்திக் கிரயம் | 43 000 |

உணவு பொதியிடும் பெட்டி ஒன்றுக்கான கிரயம் $= \frac{43000}{600}$ (1/2) (1/2)

= ரூபா 71.66 (01)

(02 புள்ளிகள்)

ix. **தேறிய இலாபக் கணிப்பீடு**

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனை | | 108 000 (1/2) |
| (-) விற்பனைக் கிரயம் | 36 000 | |
| வாகன ஓட்டுனர் சம்பளம் | 30 000 | |
| லொறி எரிபொருள், பராமரித்தல் | 20 000 | |
| விநியோக லொறி பெ. தேய்வு | 5 000 (01) | (91 000) |
| தேறிய இலாபம் | | 17 000 (1/2) |

(02 புள்ளிகள்)

அல்லது

**தேறிய இலாபக் கணிப்பீடு**

| | ரூபா | ரூபா |
|---|---|---|
| விற்பனை | | 108 000 (1/2) |
| (-) விற்பனைக் கிரயம் | 43 000 | |
| வாகன ஓட்டுனர் சம்பளம் | 30 000 | |
| லொறி எரிபொருள், பராமரித்தல் | 20 000 | |
| விநியோக லொறி பெ. தேய்வு | 5 000 (01) | (98 000) |
| தேறிய இலாபம் | | 10 000 (1/2) |

(02 புள்ளிகள்)

x. 31.03.2020 மொத்த உரிமையாண்மை 400 000 + 17 000 = ரூபா 417 000

**அல்லது**

மொத்த உரிமையாண்மை 400 000 + 10 000 = ரூபா 410 000 (01 புள்ளி)

31.03.2020 இல் மொத்தப் பொறுப்புக்கள் = ரூபா 4 000 (01 புள்ளி)

Q1

| (i) | | (ii) | (iii) | | (iv) | | (v) | | (vi) | (vii) | | (viii) | (ix) | (x) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | ஆ | 02 | அ | ஆ | அ | ஆ | அ | ஆ | 02 | அ | ஆ | 02 | 02 | 02 | 20/20 |
| 01 | 01 | | 01 | 01 | 01 | 01 | 01 | 01 | | 01 | 01 | | | | |



Department of Examinations - Sri Lanka

## பகுதி I - வணிகக் கல்வி

(**இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**2.** (i) தனியுடைமை வணிகத்தில் காணக்கூடிய **இரண்டு** பண்புகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுக்கள் **உண்மையா, பொய்யா** என்பதைக் குறிப்பிடுக.

(அ) மனிதத் தேவைகள் வரையறுக்கப்பட்டவை என்பதுடன் மனித விருப்பங்கள் சிக்கலானவை ஆகும்.

(ஆ) வணிகத்தின் அகச் சூழலை ஆய்வு செய்வதன் மூலம் வணிக வாய்ப்புகளை இனங்காணலாம்.

(இ) உற்பத்தி வணிகத்தில் கட்டடமானது உற்பத்திக் காரணியான நிலத்திற்கு உரியதாகும்.

(ஈ) வணிக அமைப்புகள் அதன் உரிமை அடிப்படையில் தனியுடைமை, பங்குடைமை என வகைப்படுத்தப்படும்.

(02 புள்ளிகள்)

(iii) பின்வருவன தரம் 10 இல் கற்கும் சுதாகர் செய்த இரண்டு செயற்பாடுகளாகும்.

1. நிகழ்நிலை (Online) முறையில் வணிகக் கல்விப் பாடத்தில் பங்கேற்றல்
2. தங்கையுடன் கிட்டாரினை இசைத்தல்

மேலே தரப்பட்ட ஒவ்வோர் செயற்பாடுகளினாலும் குறிக்கப்படும் மனிதத் தேவைகளைக் குறிப்பிட்டு, அவை நிறைவேற்றிக்கொள்ளப்பட்ட விதத்தினைக் குறிப்பிடுக. (விடையளிப்பதற்காக கீழே தரப்பட்ட அட்டவணை மாதிரியைப் பயன்படுத்துக.)

| மனிதத் தேவை | அதனை நிறைவேற்றிக்கொள்ளப்பட்ட விதம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(02 புள்ளிகள்)

(iv) 'விதுரன் இறப்பர் உற்பத்திகள்' வணிகத்தின் உரிமையாளரான விதுரன், அதிகரித்துச் செல்லும் கேள்வியினை எதிர்கொள்ளும் வகையில் தனது வணிகத்தினை விரிவாக்கும் எண்ணத்துடன் வங்கிக் கடனொன்றிற்கு விண்ணப்பித்தபோது அரசாங்கத்தினால் வங்கிக் கடனிற்கான வருடாந்த வட்டியானது 12% இருந்து 8% வரை குறைக்கப்பட்டதாக அறிந்துகொள்ள முடிந்தது.

(அ) மேற்குறித்த சம்பவத்தின் மூலம் இனங்காணக்கூடிய வணிகச் சூழற் காரணி யாது?

(ஆ) மேற்குறித்த சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு 'விதுரன் இறப்பர் உற்பத்திகள்' வணிகத்தின் மீது அக்கறை செலுத்தும் **இரண்டு** தரப்பினரை எழுதுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**2.** i.
- தனி ஒருவரே மூலதனத்தை ஈடுபடுத்தியிருப்பார்
- இலாப நட்டத்தை தனி ஒருவரே அனுபவிப்பார்
- வரையறுக்கப்படாத நட்டப் பொறுப்புக் காணப்படல்
- சட்ட ஆளுமை வழங்கப்படவில்லை
- பதிவு செய்தல் கட்டாயமில்லை
- தொடர்ந்தியங்கும் தன்மையற்றது

(01 × 2 = 02 புள்ளிகள்)

ii.
அ. உண்மை
ஆ. பொய்
இ. பொய்
ஈ. பொய்

($1/2$ x 4 = 02 புள்ளிகள்)

iii.

| மனிதத் தேவை | அதனை நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட விதம் |
|---|---|
| 1. கல்வி | நிகழ்நிலை முறையில் பாடத்தில் பங்கேற்றல். |
| 2. பொழுதுபோக்கு | தங்கையுடன் கிற்றாரினை இசைத்தல் |

(1/2 × 4 = 2 புள்ளிகள்)

iv. அ. பொருளாதாரச் சூழல் (01 புள்ளி)

ஆ. – உரிமையாளர் / விதுரன்
– அரசு
– வங்கி / நிதி நிறுவனம் (1/2 × 2 = 1 புள்ளி)

Department of Examinations - Sri Lanka

Q2

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| 02 | அ 1/2, ஆ 1/2, இ 1/2, ஈ 1/2 | 1: 01, 2: 01 | அ: 01, ஆ: 01 | 8/8 |

**3.** (i) காசோலையொன்றை எழுதும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய காரணிகள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.

(அ) வரவு அட்டையினையோ, கடனட்டையினையோ பெற்றுக்கொள்ள வங்கிக் கணக்கினை பேண வேண்டிய தேவையில்லை.

(ஆ) தொடர்பாடலானது ஒற்றைச் செயற்பாடல்லாது பொதுவான அடிப்படைகள் சிலவற்றினை உள்ளடக்கிய செயன்முறையாகும்.

(இ) ஆயுளையோ, சொத்தினையோ காப்புறுதி செய்ய ஏதேனுமொரு தரப்பினருக்குள்ள உரிமை அதியுயர் நம்பிக்கையாகும்.

(ஈ) காசோலையொன்று தொடர்பில் கட்டளையைப் பெறுபவர் எப்போதுமே நடைமுறைக் கணக்கொன்றை உடையவராவார். (02 புள்ளிகள்)

(iii) விசேட கூட்டமொன்று 27 ஆம் திகதி மார்ச் மாதம் மாலை 3 மணிக்கு பாடசாலையில் நடைபெற உள்ளதாகக் குறிப்பிட்டு, அதிபரினால் சகல பெற்றார்களுக்கும் கடிதங்களை தபாலில் அனுப்பி வைக்கப்பட்டது.

(அ) மேலே தரப்பட்ட சம்பவத்தில் குறிப்பிடப்படும் தொடர்பாடலின் அடிப்படை மூலங்கள் **இரண்டினை** எழுதுக.

(ஆ) மேலே (iii) (அ) இல் நீங்கள் குறிப்பிட்ட தொடர்பாடல் அடிப்படை மூலங்கள் ஒவ்வொன்றிற்கும் சம்பவத்தில் இருந்து ஒவ்வோர் உதாரணம் வீதம் எழுதுக. (02 புள்ளிகள்)

(iv) அலுவலக பேருந்து சேவையொன்றின் சாரதியான சரண் எந்நாளும் அதிகாலை 5 மணிக்கு மாத்தறை பேருந்துத் தரிப்பிடத்திலிருந்து புறப்பட்டு அதிவேகச் சாலை ஊடாக புறக்கோட்டை மத்திய பேருந்துத் தரிப்பிடம் வரை பயணிப்பார். புறக்கோட்டை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பேருந்திற்கு டீசலினைப் பெற்றுக்கொள்ளும் சரண் அதே நாளன்று மாலை 5 மணிக்கு மாத்தறை நோக்கிப் புறப்படுவார்.

மேற்குறித்த சம்பவத்தின் அடிப்படையில் போக்குவரத்தின் அடிப்படைகளான வழி, ஊடகம், வலு, தரப்பிடம் என்பவற்றிற்கு உதாரணங்களை வெவ்வேறாக எழுதுக. (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**3.** i.
- திகதி சரியாக எழுதப்படல் வேண்டும்.
- பணம் பெறுபவரின் பெயர் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.
- காசோலையின் பெறுமதி எண்ணிலும் எழுத்திலும் சரியாக எழுதப்படல் வேண்டும்.
- வரைபவரினால் கையொப்பம் சரியாக இடப்படல் வேண்டும்.
- காசோலையில் ஏதாவது திருத்தங்களைச் செய்தால் அது வரைபவரினால் முழுமையாகக் கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
- காசோலையின் அடியிதழில் தேவையான விபரங்கள் சரியாக நிரப்பப்படல் வேண்டும்.
- காந்தமையிடப்பட்ட பகுதிக்குள் எந்த விடயமும் எழுதப்படல் ஆகாது.
- பொருத்தமான முறையில் குறுக்குக் கோடிடல் வேண்டும்.

(1 × 2 = 2 புள்ளிகள்)

ii. அ. பொய்

ஆ. உண்மை

இ. பொய்

ஈ. பொய் (1/2 × 4 = 2 புள்ளிகள்)

iii. அ. - அனுப்புபவர்
- செய்தி
- ஊடகம்
- பெறுபவர்

(1/2 × 2 = 1 புள்ளி)

ஆ. அனுப்புபவர் - அதிபர்
செய்தி - மார்ச் 27 ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு விசேட கூட்டம் பாடசாலையில் நடைபெற இருப்பது.
ஊடகம் - எழுத்து மூலம்
பெறுபவர் - பெற்றோர்

(1/2 × 2 = 1 புள்ளி)

iv. வழி - அதிவேக சாலை
ஊடகம் - பேரூந்து
வலு - டீசல்
தரிப்பிடம் - மாத்தறை பேரூந்துத் தரிப்பிடம் / புறக்கோட்டை பேரூந்துத் தரிப்பிடம்

(1/2 × 4 = 2 புள்ளி)

Department of Examinations - Sri Lanka

Q3

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| 2 | அ 1/2, ஆ 1/2, இ 1/2, ஈ 1/2 | அ 01, ஆ 01 | 2 | 8/8 |

**4.** (i) முதலீட்டிற்கான மூலமொன்றைத் தெரிவுசெய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் **இரண்டினை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பின்வரும் கூற்றுகள் **உண்மையா, பொய்யா** என்பதனைக் குறிப்பிடுக.

(அ) முகாமைத்துவக் கருமங்களில் மிகவும் முக்கியமான முகாமைத்துவக் கருமம் தலைமை தாங்குதலாகும்.

(ஆ) சந்தைப்படுத்தல் கலவையின் மேம்படுத்தல் என்பது வணிகமொன்றில் விற்பனையை அதிகரித்துக்கொள்ளப் பயன்படுத்தும் பல்வேறு உத்திகளைக் குறிக்கும்.

(இ) முதலீட்டின் நட்ட இடரிற்கும் அதன் அனுகூலத்திற்கும் இடையே நேரடித் தொடர்பு உள்ளது.

(ஈ) பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் குறுங்கால நிதித் தேவையினைப் பூர்த்தி செய்துகொள்வதற்கு திறைசேரி உண்டியல்கள் வெளியிடப்படும். (02 புள்ளிகள்)

(iii) 'அமரச்சுவை உற்பத்திகள்' வணிகத்தினால் உற்பத்தி செய்யப்படும் 'பலாக்கொட்டை மா' இனை அறிமுகப்படுத்தும் நடவடிக்கைகள் மிகவும் வெற்றிகரமாக இடம்பெற்றன. அதற்கெனப் பின்பற்றப்பட்ட படிமுறைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.

A - பலாக்கொட்டை மாவினைப் பொதி செய்யும் பைக்கற்றுகளை சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் தயாரிக்கத் தீர்மானிக்கப்பட்டது.

B - முதலாவது மாதத்தின் விற்பனை அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்த பின்னர் விற்பனை விலை மீது 2% கழிவு வழங்கல்.

C - நேரடி விநியோக நடவடிக்கைகளுக்காக விற்பனை ஊழியர்களைப் பணிக்கமர்த்துதல்.

மேற்குறித்த ஒவ்வொரு படிமுறைகளிலும் குறிப்பிடப்படும் முகாமைத்துவ செயன்முறையின் கருமத்தினையும் சந்தைப்படுத்தல் கலவையின் மாறியையும் எழுதுக. (விடையளிப்பதற்காக பின்வரும் அட்டவணை மாதிரியைப் பயன்படுத்துக. முதற் படிமுறையான (A) அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.)

| **படிமுறை** | **முகாமைத்துவக் கருமம்** | **சந்தைப்படுத்தல் கலவை மாறி** |
|---|---|---|
| A | திட்டமிடல் | உற்பத்திப் பொருள் |
| B | | |
| C | | |

(02 புள்ளிகள்)

(iv) இரத்தினம் தனது ரூ. 500 000 இற்கான பணி ஓய்வு உபகாரத்தொகையை நிலையான வைப்பொன்றில் வைப்பிலிட்டதுடன், நந்திமித்திரன் தனது ரூ. 500 000 இற்கான பணி ஓய்வு உபகாரத்தொகையை கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்தார். வருடமொன்றின் இறுதியில் இரத்தினத்திற்கு ரூ. 40 000 உம் நந்திமித்திரனிற்கு ரூ. 75 000 உம் அனுகூலமாகக் கிடைக்கப்பெற்றது.

(அ) மேற்குறித்த சம்பவத்தில் இரத்தினத்தினாலும், நந்திமித்திரனினாலும் பெற்றுக்கொள்ளப்பட்ட அனுகூலங்களைக் குறிக்கும் சொற்களை வெவ்வேறாக எழுதுக.

(ஆ) சமமான பணத்தொகையினை, சமமான காலப்பகுதியில் முதலீடு செய்திருந்தாலும் இரத்தினத்தை விட நந்திமித்திரனிற்கு அதிகமான அனுகூலம் கிடைக்கப்பெற்றதற்கான காரணம் என்ன? (02 புள்ளிகள்)

**(மொத்தம் 08 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**4.** i. – முதலீட்டின் நோக்கம்

– முதலீட்டில் காணப்படும் இடரின் தன்மை

– முதலீட்டிலிருந்து கிடைக்கும் நன்மைகள் / திரும்பல்கள்

(1 × 2 = 2 புள்ளி)

ii. அ. பொய்

ஆ. உண்மை

இ. உண்மை

ஈ. பொய் (1/2 × 4 = 2 புள்ளிகள்)

iii.

| படிமுறை | முகாமைத்துவக் கருமம் | சந்தைப்படுத்தல் கலவை மாறி |
|---|---|---|
| A | திட்டமிடல் | உற்பத்திப் பொருள் |
| B | கட்டுப்படுத்தல் | விலை |
| C | ஒழுங்கமைத்தல் | இடம் |

(1/2 × 4 = 02 புள்ளிகள்)

iv. அ. இரத்தினம் – வட்டி வருமானம்
நந்தி மித்திரன் – பங்குலாபம்

(1/2 × 2 = 01 புள்ளி)

ஆ. – கொழும்பு பங்குச் சந்தையில் முதலீடு செய்தல் நிலையான வைப்பில் முதலீடு செய்வதை இடர் கூடியதாகும். (01 புள்ளி)

Department of Examinations - Sri Lanka

| Q4 | (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|---|
| | 02 | அ 1/2, ஆ 1/2, இ 1/2, ஈ 1/2 | 02 | அ 01, ஆ 01 | $\frac{8}{8}$ |

## பகுதி II - கணக்கீடு

**(இரண்டு** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.)

**5.** (i) வணிகமொன்றின் பேரேட்டில் காணக்கூடிய பொறுப்புக் கணக்குகள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) வணிகமொன்றில் நடைபெற்ற இரண்டு கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய இரட்டைப் பதிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| (அ) கொள்வனவுக் கணக்கு | வரவு | ரூ. 20 000 |
| கடன்கொடுநர் கணக்கு | செலவு | ரூ. 20 000 |
| (ஆ) காசுக் கணக்கு | வரவு | ரூ. 4 500 |
| கொடுத்த கழிவு | வரவு | ரூ. 500 |
| கடன்படுநர் கணக்கு | செலவு | ரூ. 5 000 |

மேலே இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலையும் எழுதுக. (02 புள்ளிகள்)

(iii) சந்துருவின் வணிகத்தில் 01.01.2020 இல் காணப்பட்ட சகல சொத்துக்கள், பொறுப்புகளின் மீதிகள் பின்வருமாறு.

| | |
|---|---|
| தளபாடம் ................................... | ரூ. 250 000 |
| சரக்கிருப்பு ................................... | ரூ. 140 000 |
| கடன்கொடுநர்கள் ........................... | ரூ. 20 000 |
| வங்கிக் கடன் ................................ | ரூ. 100 000 |
| காசு ............................................ | ரூ. 30 000 |

07.01.2020 இல் முடிவுற்ற வாரத்தினுள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

1. ரூ. 20 000 இற்கான சரக்கினை கடனுக்குக் கொள்வனவு செய்தல்
2. ரூ. 3 000 ஊழியர்களுக்கான சம்பளம் வழங்குதல்
3. கிரயம் ரூ. 40 000 ஆன சரக்கிருப்பினை ரூ. 50 000 இற்கு உடன் காசுக்கு விற்றல்

**வேண்டப்படுவன:**

(அ) மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் தாக்கம் செலுத்தும் விதத்தைக் காட்டுக. (விடையளிப்பதற்காக பின்வரும் மாதிரியைப் பயன்படுத்துக.)

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் (ரூ.) | | | = உரிமையாண்மை (ரூ.) | + பொறுப்புக்கள் (ரூ.) | |
|---|---|---|---|---|---|---|
| | தளபாடம் | + சரக்கிருப்பு | + காசு = | உரிமையாண்மை | + வங்கிக்கடன் | + கடன்கொடுத்தோர் |
| 1. | | | | | | |
| 2. | | | | | | |
| 3. | | | | | | |

(ஆ) மேற்குறித்த கொடுக்கல் வாங்கல்களின் பின்னர் 07.01.2020 இல் சந்துருவின் வணிகத்தின் பின்வரும் உருப்படிகளுக்கான மீதிகளை காட்டுக.

(1) காசு (2) உரிமையாண்மை (04 புள்ளிகள்)

(iv) ராகவனின் வணிகத்தில் 2020 டிசெம்பர் மாதத்திற்கான காசுக் கொடுக்கல் வாங்கல்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளன. 01.12.2020 இல் காசு மீதி ரூ. 12 500 ஆகும்.

| திகதி | பட்டியல் இலக்கம் | கைச்சாத்து இலக்கம் | விபரம் | தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 02.12.2020 | 01 | - | வங்கிக்கடன் பெறல் | 50 000 |
| 05.12.2020 | - | 001 | பொருட்களை கொள்வனவு செய்தல் | 45 000 |
| 10.12.2020 | - | 002 | கடைக்கான வாடகை செலுத்தல் | 1 500 |
| 15.12.2020 | 02 | - | உடன் காசுக்கு விற்பனை | 25 000 |
| 20.12.2020 | 03 | - | கடன்படுநரிடம் காசு பெறப்படல் | 10 000 |
| 30.12.2020 | - | 003 | ஊழியர்களுக்கு சம்பளம் கொடுத்தல் | 30 000 |

**வேண்டப்படுவது:**

மேலே தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை ராகவன் வணிகத்திற்கான காசேட்டில் பதிவுசெய்து 31.12.2020 இற்கு காசேட்டினை சமப்படுத்துக. (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**5.**

i. – கடன் கொடுத்தோர் கணக்கு

– வங்கிக் கடன் கணக்கு

– அட்டுறு செலவுகள் கணக்கு / கொடுக்க வேண்டிய செலவுக் கணக்கு

(1 × 2 = 2 புள்ளிகள்)

ii.

அ. கடனுக்கு பண்டங்கள் கொள்வனவு ரூபா 20 000 (01 புள்ளி)

ஆ. – கடன் பட்டோருக்கு ரூபா 500 கழிவாகக் கொடுத்து ரூபா 4500 காசு பெறப்பட்டது.

– கடன் பட்டோரிடம் ரூபா 5000 கடனைத் தீர்ப்பதற்காக 10% கழிவுடன் காசு அறவிடப்பட்டது.

– கடன் பட்டோரிடம் ரூபா 4500 காசு 10% கழிவு கொடுத்துப் பெறப்பட்டது.

(1 × 1 = 01 புள்ளி)

iii. அ.

| கொடுக்கல் வாங்கல் | சொத்துக்கள் | | | உரிமையாண்மை | பொறுப்புக்கள் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | தளபாடம் | சரக்கிருப்பு | காசு | உரிமையாண்மை | வங்கிக் கடன் | கடன் கொடுத்தோர் | |
| 1 | | + 20 000 | | | | + 20 000 | 1/2 |
| 2 | | | - 3000 | - 3000 | | | 1/2 |
| 3 | | -40 000 | + 50 000 | + 10 000 | | | 01 |

(02 புள்ளிகள்)

ஆ. 1) காசு – ரூபா 77 000 (01 புள்ளி)

2) உரிமையாண்மை – ரூபா 307 000 (01 புள்ளி)

iv.

வரவு காசுக்கணக்கு செலவு

| திகதி | ப.சீ.இ | விபரம் | பே.ப | ரூபா | திகதி | கை.இ | விபரம் | பே.ப | ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.12.20 | | மீதி கீ.கொ.வ | | 12 500 | 05.12.20 | 001 | கொள்வனவு க/கு | | 45 000 |
| 02.12.20 | 01 | வங்கிக் கடன் க/கு | | 50 000 | 10.12.20 | 002 | வாடகை க/கு | | 1 500 |
| 15.12.20 | 02 | விற்பனை க/கு | | 25 000 | 30.12.20 | 003 | ஊழியர் சம்பளம் க/கு | | 30 000 |
| 20.12.20 | 03 | கடன் பட்டோர் க/கு | | 10 000 | 31.12.20 | | மீதி. கீ. கொ. செ | | 21 000 |
| | | | | 97 500 | | | | | 97 500 |
| 01.01.21 | | மீதி. கீ. கொ. வ | | 21 000 | | | | | |

(04 புள்ளிகள்)

| Q5 | (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|---|
| | 02 | 02 | அ 02 / ஆ 02 | 04 | 12/12 |

Department of Examinations - Sri Lanka

**6.** (i) காசேட்டின் மூலம் நிறைவேற்றப்படும் **இரண்டு** தொழிற்பாடுகளை எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பாதணி உற்பத்தி வணிகமொன்றில் பயிற்றுவிக்கப்படாத கணக்கு எழுதுவினைஞரினால் 2020 செப்டெம்பர் மாதத்திற்கு தயாரிக்கப்பட்ட உற்பத்திக்கிரய கூற்று பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| தோலிற்கானக் கிரயம் | 30 000 |
| பாதணி தைப்பவருக்கான சம்பளம் | 15 000 |
| தொழிற்சாலைக்கான வாடகை | 30 000 |
| விளம்பரம் | 10 000 |
| பாதணிகளை ஒட்டும் பதார்த்தம் | 5 000 |
| விநியோக லொறி ஓட்டுனர் சம்பளம் | 10 000 |
| மொத்த உற்பத்தி கிரயம் | 100 000 |

- தயாரிக்கப்பட்ட பாதணிச் சோடிகள் 200 ஆகும்.

பாதணிச் சோடியொன்றிற்கான உற்பத்திக் கிரயத்தினைக் கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

(iii) கபினின் வணிகத்தின் 31.12.2020 இற்கு தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியின் வரவு, செலவு நிரல்களின் கூட்டுத்தொகைகள் சமப்படவில்லை. வேறுபாட்டிற்கான காரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- செலுத்திய மின்கட்டணம் ரூ. 7000 காசேட்டில் சரியாகப் பதிவிடப்பட்டு, மின்சாரக் கட்டணக் கணக்கில் ரூ. 700 என வரவு வைத்திருத்தல்
- விற்பனைக் கணக்கின் செலவு மீதி ரூ. 2000 இனால் குறைவாகக் கூட்டப்பட்டமை
- இயந்திரப் பழுதுபார்த்தல் செலவு ரூ. 15000 இயந்திரக் கணக்கில் வரவு வைக்கப்பட்டமை
- பெற்ற கழிவுக் கணக்கின் மீதி ரூ. 2300 பரீட்சை மீதிக்குக் கொண்டு செல்லப்படாமை

**வேண்டப்படுவன:**

(அ) தொங்கல் கணக்கு

(ஆ) 31.12.2020 இல் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதியில் தொங்கல் கணக்கு மீதி காணப்படவேண்டிய நிரல் எதுவெனக் குறிப்பிடுக. (04 புள்ளிகள்)

(iv) பின்வருவன சிபி வணிகத்தின் 2020 டிசெம்பர் மாதத்திற்கான வங்கிக் கணக்கும் வங்கிக்கூற்றும் ஆகும்.

**வங்கிக்கணக்கு**

| திகதி | பட்டியல் இல. | விபரம் | பே. ப. | பெறுமதி (ரூ.) | திகதி | பட்டியல் இல. | விபரம் | பே. ப. | பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01.12 | | மீதி கீ.கொ.வ. | | 22 000 | 05.12 | | கொள்வனவு (812301) | | 20 000 |
| 08.12 | | காசோலை வைப்பு (711322) | | 15 500 | 10.12 | | கடன் கொடுத்தோர் (812302) | | 3 000 |
| 10.12 | | காசு வைப்பு | | 25 000 | 16.12 | | சம்பளம் (812303) | | 24 000 |
| 28.12 | | காசோலை வைப்பு (100100) | | 12 000 | 26.12 | | கடை வாடகை (812304) | | 5 000 |
| | | | | | 31.12 | | மீதி கீ.கொ.செ. | | 22 500 |
| | | | | 74 500 | | | | | 74 500 |

**வங்கிக்கூற்று**

| திகதி | விபரம் | வரவு (ரூ.) | செலவு (ரூ.) | மீதி (ரூ.) |
|---|---|---|---|---|
| 01.12 | மீ.கீ.கொ.வ. | | | 22 000 |
| 07.12 | காசோலை (812301) | 20 000 | | 2 000 |
| 10.12 | காசோலை வைப்பு | | 15 500 | 17 500 |
| 10.12 | காசோலை (812302) | 3 000 | | 14 500 |
| 10.12 | காசு | | 25 000 | 39 500 |
| 20.12 | காசோலை (812303) | 24 000 | | 15 500 |
| 23.12 | நிலையான கட்டளைக் கொடுப்பனவு (காப்புறுதிக் கட்டணம்) | 2 000 | | 13 500 |
| 30.12 | வங்கிக் கட்டணம் | 1 000 | | 12 500 |

**வேண்டப்படுவன:**

(அ) சிபியின் வணிகத்தின் 31.12.2020 இல் வங்கிக் கணக்கின் மீதியும், வங்கிக்கூற்று மீதியும் சமப்படாமைக்கான காரணங்களை எழுதுக.

(ஆ) சிபியின் வணிகத்தின் 31.12.2020 இல் வங்கிக் கணக்கின் மீதியைச் சீராக்குக. (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

Department of Examinations - Sri Lanka

**6.**

i. – மூல ஏடாகத் தொழிற்படுகின்றது.

– பேரேட்டுக் கணக்காக தொழிற்படுகின்றது.

(1 × 2 = 2 புள்ளிகள்)

ii.

**30.09.2020 இல் முடிவடைந்த மாதத்திற்கான**
**உற்பத்திக் கிரயக் கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| தோலிற்கான கிரயம் | 30 000 | |
| பாதணி தைப்பவருக்கான சம்பளம் | 15 000 | |
| முதன்மைக் கிரயம் | | 45 000 |
| **உற்பத்தி மேந்தலைக் கிரயம்** | | |
| தொழிற்சாலைக்கான வாடகை | 30 000 | |
| பாதணிகளை ஒட்டும் பதார்த்தம் | 5 000 | 35 000 |
| உற்பத்திக் கிரயம் | | 80 000 |

– பாதணி சோடி ஒன்றிற்கான கிரயம் $= \frac{80000 \ (1/2)}{200 \ (1/2)}$

= ரூபா 400 (01)

(02 புள்ளிகள்)

iii. அ.

**தொங்கல் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | பரீட்சை மீதி | | 2 000 | | மின்சாரக் கட்டணம் | | 6 300 (01) |
| | விற்பனை | | 2 000 (01) | | | | |
| | பெற்ற கழிவு | | 2 300 (01) | | | | |
| | | | 6 300 | | | | 6 300 |

(03 புள்ளிகள்)

ஆ. வரவு நிரலில் (01 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

iv. அ. – டிசம்பர் மாதம் வங்கியில் வைப்பிலிடப்பட்டு இது வரையில் வசூலிக்கப்படாத காசோலை இலக்கம் 100100 – ரூபா 12 000

– டிசம்பர் மாதம் கடை வாடகைக்கு வழங்கி இதுவரை வங்கியில் மாற்றப்படாத காசோலை இலக்கம் 812304 – ரூபா 5 000

– வியாபாரத்தின் வங்கிக் கணக்கில் பதியத் தவறிய நிலையான கட்டளை காப்புறுதிக் கொடுப்பனவு ரூபா 2 000

– வியாபார வங்கிக் கணக்கில் பதியத் தவறிய வங்கிக் கட்டணம் – ரூபா 1000

(1/2 × 4 = 2 புள்ளிகள்)

ஆ. **வங்கிக் கணக்கு**

| திகதி | விபரம் | பே.ப | பெறுமதி | திகதி | விபரம் | பே.ப | பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | மீதி கீ. கொ. வ | | 22 500 (1/2) | | காப்புறுதிக் கட்டணம் | | 2 000 (1/2) |
| | | | | | வங்கிக் கட்டணம் | | 1 000 (1/2) |
| | | | | | மீதி கீ. கொ. செ | | 19 500 (1/2) |
| | | | 22 500 | | | | 22 500 |
| | மீதி கீ. கொ. வ | | 19 500 | | | | |

(02 புள்ளிகள்)

Q6

| (i) | (ii) | (iii) | (iv) | |
|---|---|---|---|---|
| 02 | 02 | அ: 03, ஆ: 01 | அ: 02, ஆ: 02 | 12/12 |

Department of Examinations - Sri Lanka

7. (i) இலாப நோக்கற்ற நிறுவனத்தின் பெறுவனவு, கொடுப்பனவு கணக்கிற்கும் வருமானக் கூற்றிற்கும் இடையிலான வேறுபாடுகள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பொன்தாரகை சிறுவர் ஒன்றியத்தின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 50 ஆகும். ஒரு அங்கத்தவருக்கான மாதாந்த கட்டணம் ரூ. 100 ஆகும். 31.12.2020 இல் முடிவுற்ற வருடத்தில் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு.

| | ரூ. |
|---|---|
| 2020 வருடத்திற்கு பெறப்பட்ட அங்கத்துவப் பணம் .... | 40 000 |
| பழைய பத்திரிகைகளை விற்று பெறப்பட்ட பணம் ..... | 500 |
| மின்சாரக் கட்டணம் செலுத்துதல் ................................ | 12 000 |
| உபசாரச் செலவு ........................................................ | 1 500 |
| தளபாடக் கொள்வனவிற்கு செலுத்துதல் .................... | 100 000 |
| ஏனைய செலவுகள் ....................................................... | 2 500 |

- தளபாடத்திற்கு வருடாந்தம் 10% பெறுமானத் தேய்விடப்படும்.

31.12.2020 இல் முடிவுற்ற வருடத்திற்கான பொன்தாரகை சிறுவர் ஒன்றியத்தின் வருமானக் கூற்றைத் தயாரிக்குக. (02 புள்ளிகள்)

(iii) சதுநிதாவின் வணிகத்தின் 31.12.2020 இலுள்ளவாறான பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது.

| | வரவு (ரூ.) | செலவு (ரூ.) |
|---|---|---|
| 01.01.2020 இல் சரக்கிருப்பு ........................................ | 28 000 | |
| கொள்வனவு ........................................................... | 350 000 | |
| உட்சுமைக்கூலி .......................................................... | 1 500 | |
| விற்பனை ................................................................ | | 480 000 |
| கடன்பட்டோர் ........................................................ | 37 000 | |
| கடன்கொடுத்தோர் .................................................... | | 50 000 |
| முதலீடுகள் ............................................................ | 50 000 | |
| மின்சாரக் கட்டணம் .................................................. | 25 000 | |
| காசு மீதி ................................................................ | 40 000 | |
| வங்கி மீதி .............................................................. | | 12 000 |
| கொடுத்த கழிவு ....................................................... | 1 200 | |
| பெற்ற கழிவு .......................................................... | | 2 700 |
| காணியும் கட்டடங்களும் (கிரயத்தில்) ............................ | 400 000 | |
| விளம்பரச் செலவுகள் .................................................. | 20 000 | |
| 8% வங்கிக்கடன் ....................................................... | | 100 000 |
| மூலதனம் ................................................................ | | 308 000 |
| | 952 700 | 952 700 |

மேலதிக தகவல்கள்:

- 31.12.2020 இல் சரக்கிருப்பு மீதி ரூ. 32 000 ஆகும்.
- 31.12.2020 இல் கடன்பட்டோரில் ரூ. 2 000 அறவிடமுடியாக் கடனாகப் பதிவிடப்பட்டது.
- பெறப்பட வேண்டிய முதலீட்டு வருமானம் ரூ. 5 000 ஆகும்.

**வேண்டப்படுவன:**

(அ) 31.12.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான இலாப நட்டக்கூற்று (04 புள்ளிகள்)

(ஆ) 31.12.2020 இல் இருந்தவாறான நிதிநிலைமைக் கூற்று (04 புள்ளிகள்)

**(மொத்தம் 12 புள்ளிகள்)**

* * *

Department of Examinations - Sri Lanka

**7.**

i.

| பெறுவனவு கொடுப்பனவுக் கணக்கு | வருமானக் கூற்று |
|---|---|
| – காசேட்டின் சுருக்கத்தை ஒத்திருக்கும். | – பெரும்பாலும் இலாப நட்டக் கணக்கை ஒத்திருக்கும். |
| – காசுப் பெறுவனவுகள் கொடுப்பனவுகள் பதிவு செய்யப்படும். | – காலப் பிரிவின் வருமானங்கள் செலவுகள் மாத்திரம் பதிவு செய்யப்படும். |
| – மூலதனம் மற்றும் வருமான இயல்பு கொண்ட பெற்ற வருமானங்கள் மற்றும் கொடுத்த செலவீனங்கள் பதிவு செய்யப்படும். | – வருமான இயல்பு கொண்ட ஆண்டுக்குரிய வருமானங்கள் மற்றும் செலவுகள் மாத்திரம் பதிவு செய்யப்படும். |
| – கணக்காண்டின் முடிவில் இறுதிக் காசு மீதியைக் காட்டும். | – இறுதி வருமான மிகை அல்லது வருமானக் குறைவினைக் காட்டும். |
| – காசு அடிப்படையில் தயார் செய்யப்படும். | – அட்டுறு அடிப்படையில் தயார் செய்யப்படும். |

(1 × 2 =2 புள்ளிகள்)

ii.

**பொன் தாரகை சிறுவர் ஒன்றியத்தின் 31.12.2020 இல் முடிவுற்ற வருடத்திற்கான வருமானக் கூற்று**

| விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|
| **வருமானம்** | | |
| அங்கத்துவப் பணம் | 60 000 (1/2) | |
| பழைய பத்திரிகை விற்பனை | ✷ 500 | 60 500 |
| **(-) செலவுகள்** | | |
| மின்சாரக் கட்டணம் | ✷ 12 000 | |
| உபசாரச் செலவு | ✷ 1 500 | |
| தளபாடப் பெறுமானத் தேய்வு | 10 000 (1/2) | |
| ஏனைய செலவுகள் | ✷ 2 500 | |
| | | (26 000) |
| வருமான மிகை | | 34 500 (1/2) |

✷ 4 உருப்படிகளுக்கு 1/2 புள்ளி (02 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka

iii. அ.

**சதுநிதா வணிகத்தின்** (1/2)
**31.12.2020 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று**

| விபரம் | தொகை ரூபா | தொகை ரூபா | தொகை ரூபா |
|---|---|---|---|
| விற்பனை | | | 480 000 |
| **கழி** **விற்பனைக்கிரயம்** | | | |
| 01.01. 2020 இல் சரக்கிருப்பு | | 28,000 | |
| கொள்வனவுகள் | | 350 000 | |
| உட்சுமைக் கூலி | | 1 500 | |
| விற்கத் தயாராக இருந்த சரக்கின் பெறுமதி | | 379 500 | |
| **கழி** 31.12.2020 இல் சரக்கிருப்பு | | (32 000) | (1/2) |
| விற்பனை கிரயம் | | | (347 500) (1/2) |
| **மொத்த இலாபம்** | | | 132 500 (1/2) |
| **கூட்டு** **பிற வருமானங்கள்** | | | |
| முதலீட்டு வருமானம் | | 5 000 (1/2) | |
| பெற்ற கழிவு | | 2 700 | 7 700 |
| | | | 140 200 |
| **கழி** | | | |
| **விநியோகச் செலவுகள்** | | | |
| அறவிடமுடியாக் கடன் | 2 000 (1/2) | | |
| கொடுத்த கழிவு | 1 200 | | |
| விளம்பரச் செலவுகள் | 20 000 | 23 200 | |
| **நிர்வாகச் செலவுகள்** | | | |
| மின்சாரக் கட்டணம் | 25 000 | 25 000 | |
| **நிதிச் செலவு** | | | |
| வங்கிக் கடன் வட்டி | 8 000 (1/2) | 8 000 | (56 200) |
| தேறிய இலாபம் (மூலதனக் கணக்கிற்கு மாற்றியது) | (1/2) | | 84 000 |

Department of Examinations - Sri Lanka

( 04 புள்ளிகள்)

ஆ.

**சதுநிதா வணிகத்தின்**

**31.12.2020 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று** (1/2)

(1/2)

| விபரம் | கிரயம் | தி.பெ.தே | தே. பெறுமதி |
|---|---|---|---|
| **நடைமுறை அல்லா சொத்து** | | | |
| காணி கட்டிடம் | 400 000 | - | 400 000 |
| | | - | |
| | 400,000 | | 400 000 |
| முதலீடுகள் | | | 50 000 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சரக்கிருப்பு | | 32 000 (1/2) | |
| கடன்பட்டோர் | | 35 000 (1/2) | |
| பெறவேண்டிய முதலீட்டு வருமானம் | | 5 000 (1/2) | |
| காசு மீதி | | 40 000 | 112 000 |
| மொத்தச் சொத்துக்கள் | | | 562 000 |
| **உரிமையாண்மை** | | | |
| மூலதனம் | | 308 000 | |
| கூட்டு: தேறிய இலாபம் | (1/2) | 84 000 | 392 000 |
| **நடைமுறையல்லாப் பொறுப்பு** | | | |
| 8% வங்கிக் கடன் | | | 100 000 |
| **நடைமுறைப்பொறுப்பு** | | | |
| கடன்கொடுத்தோர் | | 50 000 | |
| செலுத்த வேண்டிய வங்கிக் கடன் வட்டி | | 8 000 (1/2) | |
| வங்கி மேலதிகப் பற்று | | 12 000 (1/2) | 70 000 |
| மொத்த உரிமையாண்மையும் பொறுப்பும் | | | 562 000 |

(04 புள்ளிகள்)

Q7

| (i) | (ii) | (iii) | | |
|---|---|---|---|---|
| அ 01 \| ஆ 01 | 02 | அ 04 \| ஆ 04 | | 12/12 |

Department of Examinations - Sri Lanka

**அல்லது**

**சதுநிதா வணிகத்தின்** (1/2)

**31.12.2020 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வியாபார இலாப நட்டக் கணக்கு**

| விபரம் | ரூபா | ரூபா | விபரம் | ரூபா | ரூபா |
|---|---|---|---|---|---|
| 01.01.2020 இல் சரக்கிருப்பு | | 28,000 | விற்பனை | | 480 000 |
| கொள்வனவு | 350 000 | | | | |
| உட்சுமைக் கூலி | 1 500 | 351 500 | | | |
| **விற்கத் தயாராக இருந்த சரக்கின் பெறுமதி** | | 379 500 | | | |
| கழி 31.12.2020 சரக்கிருப்பு | | (32 000) (1/2) | | | |
| விற்பனைக்கிரயம் | | 347 500 (1/2) | | | |
| மொத்த இலாபம் கீ.கொ.செ | | 132 500 (1/2) | | | |
| | | 480 000 | | | 480 000 |
| **விநியோகச் செலவு** | | | மொத்த இலாபம் கீ.கொ.வ | | 132 500 |
| அறவிடமுடியாக்கடன் | 2 000 (1/2) | | **பிற வருமானங்கள்** | | |
| கொடுத்த கழிவு | 1 200 | | முதலீட்டு வருமானம் | 5 000 | (1/2) |
| விளம்பரச் செலவுகள் | 20 000 | 23 200 | பெற்ற கழிவு | 2 700 | 7 700 |
| **நிர்வாகச் செலவு** | | | | | |
| மின்சாரக் கட்டணம் | 25 000 | 25 000 | | | |
| **நிதிச்செலவு** | | | | | |
| வங்கிக் கடன் வட்டி | 8 000 | (1/2) 8 000 | | | |
| தேறிய இலாபம் மூலதனக் கணக்கிற்கு மாற்றப்பட்டது | (1/2) | 84 000 | | | |
| | | 140 200 | | | 140 200 |

(04 புள்ளிகள்)

**சதுநிதா வணிகத்தின்** (1/2)

**31.12.2020 இல் உள்ளவாறான ஐந்தொகை** (1/2)

| உரிமையாண்மை | ரூபா | ரூபா | நடை. அல். சொத்து | கொ.வி ரூபா | தி.பெ ரூபா | இறுதி பெறு ரூபா |
|---|---|---|---|---|---|---|
| மூலதனம் | 308 000 | | காணி கட்டிடம் | 400 000 | - | 400 000 |
| கூட்டு: தேறிய இலாபம் (1/2) | 84 000 | 392 000 | | | | |
| | | | | 400 000 | - | 400 000 |
| நடை. மு. அல்லா பொறு | | | முதலீடுகள் | | | 50 000 |
| 8% வங்கிக்கடன் | | 100,000 | **நடைமுறை சொத்து** | | 32 000 (1/2) | |
| **நடைமுறைப்பொறுப்பு** | | | சரக்கிருப்பு | | 35 000 (1/2) | |
| கடன்கொடுத்தோர் | 50 000 | | கடன்பட்டோர் | | 5 000 (1/2) | |
| அட்டுறு வங்கிக் கடன் வட்டி | 8 000 (1/2) | | பெற. வே. முத.வரு. | | 40 000 | |
| வங்கி மேலதிகப் பற்று | 12 000 (1/2) | 70 000 | காசு மீதி | | | 112 000 |
| | | 562 000 | | | | 562 000 |

(04 புள்ளிகள்)

Department of Examinations - Sri Lanka